1447

கடவுள் துணை.

# மைனர் பெண் புலம்பல்.



13 SEP

இவை

மல்லசமுத்திரம்

**M. P. கந்தசாமி கவுண்டரால்**

இயற்றப்பட்டு

திருச்செங்கோடு தாய் நாடு அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1932 [அ[illegible]

உ

கடவுள் துணை.

# பெண்கள் ஒப்பாரிக் கண்ணி.

காப்பு.

தங்கப் பாடல் தோகையர் தான்படிக்க
வக்கணையாக வரந்தர வேண்டும்.

## தகப்பனுக்குப் பெண்கள் புலம்பல்.

என்னையாவே ஐயாவே-என்
அன்புள்ள ஐயாவே
என்னையாவைக் காணுமல் நாங்கள்
அலைகிறோம் பூமியிலே
எங்கள் பெற்றோரைக் காணுமல் என்னைய...
நாங்கள் புலம்புகிறோம் பூமியிலே
நீங்கள் பெற்ற அருமையென்ன எங்களுக்கு
பேருமிட்ட நேர்த்தியென்ன
நீங்கள் வளர்த்த அருமையென்ன என்னையாவே
நீங்கள் வரிசையிட்ட நேர்த்தியென்ன

## மயிரேழவு.

என்னையாவே ஐயாவே என்
அன்புள்ள ஐயாவே
உங்கள்-பூசை மடப்பளியும் என்னைப்பெற்ற ஐயாவே
உங்கள்-பொன்னுதிரு மேனிகளும்
உங்கள்-ஆசார மாளிகையும் என்னைப்பெற்ற ஐயாவே
உங்கள்-ஆனழகர் சேவகமும்
உங்களைக் காண அரிதாகி என்னைப்பெற்ற ஐயாவே
நீங்கள் கைலாசஞ் சேர்ந்தீர்கள்
உங்களைப் பார்க்க அரிதாகி என்னைப்பெற்ற ஐயா
நீங்கள் பரமபதஞ் சேர்ந்தீர்கள்
நீங்கள் எக்காலஞ் சென்றிடுமோ என்னைப்பெற்ற ஐயா
நீங்கள் எப்போ வரப்போறீர்கள்
உங்களுக்கு நற்காலம் வந்திடுமோ என்னைப்பெற்ற ஐய
நீங்கள் நாளைவருவீர்களோ
உங்களை கூப்பிட்டால் கேட்காதோ என்னைப்பெற்ற ஐய
உங்களுக்கு கொஞ்சம் பிராக்குமுண்டோ

நாங்கள் அழைத்தகுரல் கேட்கிலேயோ என்னைப்பெற்ற ஐயாவே
உங்களுக்கு அங்கே பிராக்குமுண்டோ

## தாயாருக்குப் புலம்பல்.

என்னம்மாடி அம்மாடி என்
ஆச்சியடி பெற்றவளே

தாயைப் பறிகொடுத்து என்னம்மாடி
நாங்கள் தயங்குவமோ பூமியிலே
பெற்றவளைத் தோர்த்துவிட்டு என்னம்மாடி
நாங்கள்-பூமியிலிருப்பதுண்டோ
மாதாவைப் பறிகொடுத்து என்னம்மாடி
நாங்கள்-மண்மே விருப்போமோ
தொப்பையைத் தடவியல்லோ என்னம்மாடி
எங்கள்-தொந்திரொம்ப சோறுமிட்டாய்
எங்கள் பக்கத்தை தடவியல்லோ என்னம்மாடி
நீ-பால் கொடுத்து வளர்த்துவந்தாய்

## மயிரேழவு.

நீ-பெற்ருளிறந்தபோதே என்னைப்பெற்ற தாயே
நாங்கள் பேதமையாய் நின்றுவிட்டோம்
நீ-வளர்த்தாளிறந்தபோதே என்னைப்பெற்ற தாயே
நாங்கள் மாபாவியாகிவிட்டோம்
நீங்கள்-கல்லிழைத்த மாளிகையில் என்னைப்பெற்ற தாயே
உன் கனத்தமுடி தேடுகிரும்
உன்-மூன்றுகட்டு வாசலிலே என்னைப்பெற்ற தாயே
உங்கள் முத்துமுடி தேடுகிரும்
உழுத்தை-நிழலாமோ என்னைப்பெற்ற தாயே
உன்னைப்போல் தாயாமோ
ள்ளி நிழலாமோ என்னைப்பெற்ற தாயே
எங்களுக்கு கண்டபேர் தாயாமோ
வலி நிழலாமோ என்னைப்பெற்ற தாயே
எங்களுக்கு வேணைபேர் தாயாமோ
வ தோர்த்து விட்டு என்னைப்பெற்ற தாயே
வையகத்தில் வாழ்வோமோ
பறிகொடுத்து என்னைப்பெற்ற தாயே
நாங்கள் தயங்குவோமோ பூமியிலே

## மறுபடியும் நின்று துக்கம்.

ஆர் முகத்தைப் பார்த்தாலும் என்னைப்பெற்ற அம்மாடி
எங்களுக்கு வேறுமுகமாகுதல்லோ
எவர் முகத்தைப்பார்த்தாலும் என்னைப்பெற்ற அம்மாடி
எங்களுக்கு இந்தமுகமாகலையே
கப்பல் வரப்போகுதென்று என்னைப்பெற்ற அம்மாடி
நாங்கள் கரையேறிப் பார்த்திருந்தோம்
கப்ப லுடைந்தபோதே என்னைப்பெற்ற அம்மாடி
நாங்கள் கரையோரம் நின்றழுதோம்
உங்கள் தோணிவரப் போகுதென்று என்னைப்பெற்ற அம்மாடி
துறையேறிப் பார்த்திருந்தோம்.
உங்கள் தோணியுடைந்தவன்றே என்னைப்பெற்ற அம்மாடி
துறையோரம் நின்றழுதோம்
என் மாமியாண்மனையில் என்னைப்பெற்ற அம்மாடி
நாங்கள் மகிட்சியுடன் வாழ்கையிலே
உங்கள் ஆளடிமை சேவகமும் என்னைப்பெற்ற அம்மாடி
அங்கே வந்து நின்றாலே
என் மாதா வருவாளென்று என்னைப்பெற்ற அம்மாடி
மனமகிழ்ச்சி கொண்டிருந்தோம்
எங்கள் பெற்றார் வருவாரென்று என்னைப்பெற்ற அம்மாடி
நாங்கள் பெருமையடைந்திருந்தோம்.
எங்கள் பெருமைகுலைத்துவிட்டாய் என்னைப்பெற்ற அம்மாடி
என் பூமுடியைக்கொள்ளையென்னாய்
என் அருமைகுலைத்துவிட்டாய் என்னைப்பெற்ற அம்மா
என் ஆனமுடி கொள்ளையென்னாய்

## புருஷனுக்குப் புலம்பல்.

என் கர்த்தாவே யென்துரையே என் ஆசை மணவா
என் கண்மணியைக்காணேமே
என் பத்தாவே யென்துரையே என் ஆசை மணவா
என் பாக்கியத்தைக் காணேமே
என்னை ஐந்துபிராயத்திலே என்னைதேடிய ராஜம
என்னை அழகாகமாலையிட்டாய்
நீங்கள் பத்துபிராயத்திலே என்னைதேடிய ராஜ
என்னை பாங்காகமாலையிட்டாய்

நீர் ஆணழகர்மாலையிட்டு என்னைதேடியராஜாவே
அழகாக வைத்திருந்தீர்
நீர் கட்டழகர் மாலையிட்டு என்னைதேடியராஜாவே
என்னை காட்சியுடன் வைத்திருந்தீர்
என் காட்சிகுலைத்துவிட்டவர் என்னைதேடியராஜாவே
நீர்-மண்மேலே போய்படுத்தீர்
என்னை-கொண்ட அருமையென்ன என்னைதேடியராஜாவே
நாம்கோலம்வந்த நேர்த்தியென்ன
இப்போ-கண்டவர் நகைக்கவிட்டு என்னைதேடியராஜாவே
நீர்-கைலாசம் போய்நடந்தீர்
குதிரையலங்கரித்து என்னைதேடியராஜாவே
உமக்கு அங்கே கோடிபேர் வந்திருக்க
ஆனையலங்கரித்து என்னைதேடியராஜாவே
உமக்கு ஆயிரம்பேர் காத்திருக்க
நீ அத்தனையுங் கையமர்த்தி என்னைதேடியராஜாவே
நீங்கள் ஆகாசம்போய் நடந்தீர்

## மயிரேழவு.

நான் கட்டுக்கயரவிழ்த்தேன் என்பொன்னத்தான்
நான் கழறியில் பூவிழந்தேன்
நான் கொண்டை கயாவிழ்த்தேன் என்பொன்னத்தான்
உங்கள் கூட்டத்திலே பூவவிழ்த்தேன்
நான் வாரிமுடித்தகொண்டை என்னைவளர்த்தமுடிஐயாவே
என் வரிசைகுலைத்துவிட்டாய்
ான் சீவிமுடித்தகொண்டை என்னைவளர்த்தமுடிஐயாவே
என் சீரைகுலைத்துவிட்டாய்
ங்கள் மாணிக்கக்கூடத்திலே என்னைவளர்த்தமுடிஐயாவே
நான் மயிர்விரிக்கநாளாச்சே
ங்கள் கொற்றவர் கூடத்திலே என்னைவளர்த்தமுடிஐயாவே
நான் குழல்விரிக்கநாளாச்சே
சாந்திடும்நெற்றியிலே என்னைதேடியராஜமன்னே
எனக்கு சாம்பல்படியவைத்தாய்
பொட்டிடும் நெற்றியிலே என்னைதேடியராஜமன்னே
எனக்கு புழுதியடையவைத்தாய்
க்கு மஞ்சள்கருப்பாச்சே என்னைதேடியராஜமன்னே
எனக்கு மருதானி வேம்பாச்சே

எனக்கு புஷ்பம்கருப்பாச்சே என்னைதேடியராஜமன்று
    எனக்கு புருஷன்முகம் வேம்பாச்சே
நான் மஞ்சல்கயிர் கழட்டி என்னைதேடியராஜமன்று
    உங்கள் மாளிகையில் நின்றழுதேன்
என் குங்குமப் பொட்டழிந்து என்னைதேடியராஜமன்று
    உங்கள் கோட்டையிலே நின்றழுதேன்
நாங்கள் அடுக்குடனேபெண்பிறந்து என்னைதேடியராஜமன்று
    உங்கள் அம்பலத்தில் நின்றழுதேன்
நான் மெத்தையில் பெண்வளர்ந்து என்னைதேடியராஜமன்று
    உங்கள் மண்டபத்தில் நின்றழுதேன்
உன் தங்கமுடி கொள்ளையென்று என்னைதேடியராஜமன்று
    நான் தாலிசரடிழந்தேன்
உன் பொன்னுமுடி கொள்ளையென்று என்னைதேடியராஜமன்று
    நான் புஷ்பம்மறந்துவிட்டேன்
நான் ஆரைக்கழுத்தியல்லோ என்னைதேடியராஜமன்று
    நான் அரைக்கழுத்தியானேனே
நான் கோரைக்கழுத்தியல்லோ என்னைதேடியராஜமன்று
    நான் குரைக்கழுத்தியாகிவிட்டேன்

## மறுபடியும் நின்று துக்கம்.

என் பொன்னான அய்யாவே நீங்கள்
    பொன்னுலகம் போனதென்ன
நான் கனிவுடையாளிங்கிருக்க என்னைதேடியராஜமன்று
    நீங்கள் கைலாசம் போனதென்ன
நான் புகழுடையாளிங்கிருக்க என்னைதேடியராஜமன்று
    நீங்கள் பொன்னுலகம் போனதென்ன
நான் புருஷனில்லா பாவியென்று என்னைதேடியராஜமன்று
    என்னை பின்பழித்துச் சொல்லுவார்கள்
நான் அடங்கிநடந்தாலும் என்னைதேடியராஜமன்று
    ஆளனில்லாப் பாவியென்பார்
நான் நடுங்கி நடந்தாலும் என்னைதேடியராஜமன்று
    என்னை நாதனில்லா தேவியென்பார்
உங்கள் பல்லக்கு சேர்வைக்கு என்னைதேடியராஜமன்
    நான் பற்றிவந்தால் குற்றமில்லை.
உங்கள் துரைகளிட கூட்டத்திற்கு என்னைதேடியராஜமன்
    நான் தொடர்ந்துவந்தால் தோஷமில்லை.

நாம் பாலுஞ்சலமதுபோல் என்னை தேடியராஜமன்னு
நாம் பற்றியுறவாயிருந்தோம்
நாம் பாலுமநீரும் வேறாக என்னை தேடியராஜாவே
நமக்குப் பரமசிவன் கட்டளையோ
நாம் குருவி சிலகாலம் என்னை தேடியராஜாவே
அது கூண்டுகட்டும் பாவனைபோல்
நாம் ஆளனுந் தேவியுமாய் என்னை தேடியராஜாவே
நாம் அமர்ந்திருக்கும் வேளையிலே
அந்த காலனான எமன்வந்து என்னை தேடியராஜாவே
நம்மை கலைத்துவிட நீதியுண்டோ
உம்மை அழைக்கவருமெமனுக்கு என்னை தேடியராஜாவே
ஆடு பலி தாரேனென்றேன்
உம்மை கொல்லவருமெமனுக்கு என்னை தேடியராஜாவே
நான் கோழிபலிதாரேனென்றேன்

## மாமனுருக்குப் புலம்பல்.

என் பொன்னான மாமாவே என் ஆசையுள்ள மாமாவே
பொன்னுலகம் போனதென்ன
என் அன்புடைய மாமாவே என் ஆசையுள்ள மாமாவே
அமரர்பதி போனதென்ன
நாம் வாழும்பதியைவிட்டு என்னைவளர்த்தமுடிமாமா
நீங்கள் வைகுந்தம் போனதென்ன
நாமுறைந்த பதியைவிட்டு என்னைவளர்த்தமுடிமாமா
நீர் ஈசாபதி போனதென்ன
நான் அன்னமிட்டகைமறந்து என்னைவளர்த்தமுடிமாமா
உனக்கள்ளியிட்டேன் வாய்க்கரிசி
நான் சோறிட்டகைமறந்து என்னைவளர்த்தமுடிமாமா
நாங்கள் சொரிந்துவிட்டோம் வாய்க்கரிசி.
உங்களைக் கட்டிலில் நான்வளர்த்தி என்னைவளர்த்தமுடிமாமா
நாங்கள் கனத்தபணி செய்வதுபோய்
உம்மைப் பாடையிலேதாம்வளர்த்தி என்னைவளர்த்தமுடிமாமா
நாங்கள் பரதேசியானோமே
வீதியிலே சுற்றிவந்தால் என்னைவளர்த்தமுடிமாமா
உமக்கு வேணபணிசெய்வதுபோல்
...மியில் நீ படுத்து என்னைவளர்த்தமுடிமாமா
நாங்கள் புரண்டழலாச்சே...

## ஒப்பாரிக் கண்ணி.

உங்க ளரண்மனையில் நான்புகுந்தேன் — என்னைதேடியமாமாவே
　　உங்க ளழகுமுடிபோனதென்ன
உங்கள் மண்டபத்தில் நான்புகுந்து — என்னைதேடியமாமாவே
　　உங்கள் வண்ணமுடி போனதென்ன
உன் னரண்மனையினுள் நுழைந்து — என் மாமாவே
　　நானுர்முகத்தைப் பார்த்திடுவேன்
நானெந்தமுகங் கண்டாலும் — என் மாமாவே
　　எனக்கு சொந்தமுகமாகலையே
நான் கோடிமுகங் கண்டாலும் — என் மாமாவே
　　உங்கள் குளிர்ந்தமுகமாகலையே

### மாமியாருக்குப் புலம்பல்.

என கண்ணுன — அத்தையம்மா
　　நீ கைலங்கிரி போய் நடந்தாய்
புட்பரதம் மேறியல்லோ — அத்தையம்மா
　　நீ பொன்னுலகம் போய்நடந்தாய்
தங்கரதமேறியல்லோ — அத்தையம்மா
　　நீ தாமதமாய் போய்நடந்தாய்
பெற்றவளைக் கண்டறியேன் — அத்தையம்மா
　　பிறர் சொல்லகேட்டதுண்டு.
வளர்த்தவளை நானறியேன் — அத்தையம்மா
　　நான் வார்த்தைசொல்லக்கேட்டதுண்டு.
தயிரூட்டி நீ வளர்த்தாய் — அத்தையம்மா
　　என் தாயை மறக்கடித்தாய்
பாலூட்டி நீ வளர்த்தாய் — அத்தையம்மா
　　என் பாசமறக்கடித்தாய்
நான் தாயைமறந்து விட்டேன் — அத்தையம்ம
　　நான் சகலரையுந் தான்மறந்தேன்
என் பாசமறக்கவைத்தாய் — அத்தையம்
　　எங்களைப் பரதேசியாக்கிவிட்டாய்
அதைக் கண்டு மகிழ்வதற்கு — அத்தையம்
　　அன்புடையா ராருமில்லை
உன் பிள்ளைகளைப் பாராமல் — அத்தையம்
　　நீ போய்நடக்க நீதியுண்டோ
சின்னமகள் வாழ்ந்துவந்தால் — அத்தைய
　　நீ சேரவந்து பேசாயோ

## ஒப்பாரிக் கண்ணி.

உன் மக்களால் தான்குறையோ அத்தையம்மா
உங்கள் மருமகளால் குற்றமுண்டோ
உங்கள் பிள்ளைகளால் தான்குறையோ அத்தையம்மா
உங்கள் பேத்திமாரால் குற்றமுண்டோ
எதுகுற்றஞ் செய்தோமென்று அத்தையம்மா
நீ எழுந்துவிட்டாய் சீக்கிரம்
நாங்கள் என்ன குற்றஞ் செய்தாலும் அத்தையம்மா
நீ யிருந்தணைக்கலாகாதோ
நாங்கள் கோடிகுற்றம் செய்தாலும் அத்தையம்மா
நீங்கள் கொண்டணைக்கலாகாதோ
எங்கள் கூட்டம் வெளியாச்சே அத்தையம்மா
எங்கள் கொத்தளங்கள் பாழாச்சே
மாளி வெளியாச்சே அத்தையம்மா
எங்கள் மண்டபங்கள் பாழாச்சே

### மறுபடியும் நின்று துக்கப்படுகிறது.

என்னைக் காணவரிதாகி அத்தையம்மா
நீ கடுக நடந்து விட்டாய்
பார்க்க வரிதாகி அத்தையம்மா
பறக்க நடந்து விட்டாய்
வருங்கால மில்லையோதான் அத்தையம்மா
நான் வழிபார்க்க வேண்டாமோ
வழிபார்த்த கண்ணதிலே அத்தையம்மா
நீ பொறிப்பார்த்து கட்டிவிட்டாய்
நாங்க ளாளும்பதி யிருக்க அத்தையம்மா
நீங்கள் ஏமன்பதி போனதென்ன
உங்கள் சொந்தபதி யிங்கிருக்க அத்தையம்மா
நீ சொர்க்கபதி போனதென்ன
? யின்னஞ்சில நாளிருந்து அத்தையம்மா
எங்களை யெடுத்தணைக்கலாகாதோ
ன்னங் கொஞ்சநாளிருந்து அத்தையம்மா
கொண்டணைக்கலாகாதோ